www.Padasalai.Net www.CBSEtips.in

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

பதிவெண்

## VIII - தமிழ்

நேரம் : 2.30 மணி | மதிப்பெண்கள் : 100

*அ) பலவுள் தெரிக.* *(16x1=16)*

1. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ________ என அழைக்கப்படுகிறது.
   அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து
2. செவ்விந்தியர்கள் நிலத்தை ________ மதிக்கின்றனர்.
   அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
3. இன்றைய கல்வி ________ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
   அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்
4. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ________ நீட்சியாகவே உள்ளது.
   அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
5. தமிழின் மிகப் பழமையான இலக்கண நூல்________
   அ) இலக்கண விளக்கம் ஆ) நன்னூல்
   இ) தொல்காப்பியம் ஈ) அகப்பொருள் விளக்கம்
6. "வானமளந்தது" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
   அ) வான+மளந்தது ஆ) வான்+அளந்தது
   இ) வானம்+அளந்தது ஈ) வான்+மறந்தது
7. காந்தியடிகள் ________ போற்ற வாழ்ந்தார்.
   அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்
8. கீழ் இதழும் மேல்வாய்ப் பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து________
   அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) வ்
9. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல்
   அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய
10. குறிப்பு வினையெச்சம் ________ வெளிப்படையாகக் காட்டாது.
    அ) காலத்தை ஆ) வினையை இ) பண்பினை ஈ) பெயரை
11. தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்________
    அ) தாம்இனி ஆ) தாம்மினி இ) தாமினி ஈ) தாமனி

*பின்வரும் பாடலை படித்து வினாக்களுக்கு விடையளி.*

*உடலின் உறுதி உடையவரே*
*உலகில் இன்பம் உடையவராம்;*
*இடமும் பொருளும் நோயாளிக்கு*
*இனிய வாழ்வு தந்திடுமோ?*
*சுத்தம் உள்ள இடமெங்கும்*
*சுகமும் உண்டு நீயதனை*
*நித்தம் நித்தம் பேணுவையேல்*
*நீண்ட ஆயுள் பெறுவாயே!*

12. இப்பாடலை இயற்றியவர் யார்?
    அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
    இ) கவிமணி தேசிக விநாயகனார் ஈ) சுரதா
13. 'திட்டு முட்டு' என்ற சொல்லின் பொருள்.
    அ) தடுமாற்றம் ஆ) மனமாற்றம் இ) சிறு மாற்றம் ஈ) ஏமாற்றம்
14. பாடலில் இடம் பெற்றுள்ள மோனையைத் தேர்ந்தெடு.
    அ) காலை - மாலை ஆ) காலை-காற்று இ) உடலில்-இடமும் ஈ) இன்பம்-துன்பம்
15. 'இன்பம்' என்பதன் எதிர்ச்சொல்
    அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) வெறுப்பு ஈ) இடர்
16. நோயற்ற வாழ்வே குறைவற்ற ________
    அ) உணவு ஆ) இன்பம் இ) செல்வம் ஈ) கல்வி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

ஆ) பொருத்துக. (4x1=4)

17. படித்து - அ) முற்றெச்சம்
18. படித்தனள் மகிழ்ந்தாள் - ஆ) குறிப்புப் பெயரெச்சம்
19. பாடிய - இ) வினையெச்சம்
20. பெரிய - ஈ) பெயரெச்சம்

இ) அடிபிறழாமல் எழுதுக. (6+2+2=10)

21. "கற்றோர்க்கு கல்வி" எனத் தொடங்கும் குறளை எழுதுக.
22. "விலங்கொடு" எனத் தொடங்கும் குறளை எழுதுக.
23. "இறைக்கு" என முடியும் குறளை எழுதுக.

ஈ) எவையேனும் ஒன்பது வினாக்களுக்கு மட்டும் விடையளி. (9x2=18)

24. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
25. ஓடை எவ்வாறு ஒடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
26. சான்றோர்க்கு அழகாவது எது?
27. ஓவிய எழுத்து என்றால் என்ன?
28. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
29. வியங்காள் வினைமுற்று விகுதிகள் யாவை?
30. எழுத்துக்களின் பிறப்பு என்றால் என்ன?
31. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?
32. உவமைத் தொடருக்கு பொருத்தமான தொடர்களைப் பொருத்துக.
    அ) பசுமரத்து ஆணி போல - பயனற்ற செயல்
    ஆ) விழலுக்கு இறைத்த நீர்போல - எளிதில் மனத்தில் பதிதல்
33. பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்து எழுதுக.
    அ) புல் (கள், ற்கள்) ஆ) வரம் (கள், ங்கள்)
34. கலைச்சொல் தருக.
    அ) consonant ஆ) Ridge
35. உரிய மரபுச் சொல்லால் நிரப்புக.
    அ) பால்________ (குடி / பருகு) ஆ) பூ ________ (கொய் / பறி)

உ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் ஓரிரு வரிகளில் விடையளி. (4x4=16)

36. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதிதாசன் கூறுவன யாவை?
37. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
38. எழுத்துச் சீர் திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
39. நீர்நிலைகள் குறித்து சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.
40. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கொள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
41. சமீபத்தில் நீ படித்த புத்தகம் பற்றி எழுதுக. **(அல்லது)**
    உனக்குப் பிடித்த காட்சியை ஓவியமாக வரைக.

ஊ) எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளி. (3x7=21)

42. தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
43. வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைச் சுருக்கி எழுதுக.
44. காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
45. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

எ) கட்டுரை வடிவில் விடை தருக. (1x8=8)

46. அ) நான் விரும்பும் கவிஞர் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. **(அல்லது)**
    ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

ஏ) பின்வரும் சிந்தனை வினாவிற்கு நன்கு சிந்தித்து விடை எழுதுக. (1x7=7)

47. அ) தற்காலத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.
    ஆ) நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?

Kindly send me your study materials to padasalai.net@gmail.com